**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 56/2020 |
| Name | : Suresh |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நரசிங்காபுரத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். 18.12.2019 ம் தேதி காலை 05.30–05.45 மணிக்குள் எனது வீட்டின் அருகில் உள்ள உடுமலை – பழநி மெயின் ரோட்டில் சிவகாமியம்மாள் டீ கடையில் நான் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்தேன் அப்போது சீரங்கசாமி டீ கடையில் இருந்து வீட்டிற்கு செல்வதற்காக நடந்து சென்றார் அப்போது கிழக்கிலிருந்து மேற்காக வந்த ஆம்னி கார் அவர் மீது மோதியது. ஆஜர் எதிரி தான் அன்று ஆம்னி காரை ஓட்டி வந்தார். சீரங்கசாமிக்கு தலை மற்றும் வலது காலில் காயம் ஏற்பட்டது. நான் அவர் வீட்டிற்கு தகவல் சொன்னேன். அவரது மகள் லட்சுமியும் அவரது மனைவி ராமாத்தாளும் வந்தார்கள். தனியார் ஆம்புலன்ஸ் உடுமலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மருத்துவமனையில் சேர்த்துவிட்டு நான் வீட்டிற்கு வந்து விட்டேன். காலை சுமார் 09.30 மணி அளவில் அவர் இறந்துவிட்டதாக தகவல் கேட்டு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு போலீசார் பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சீரங்கசாமி எனக்கு தாத்தா முறை. சம்பவ சமயத்தில் அவருக்கு 85 வயதிற்கு மேல் இருக்கும். இரு புறமும் தோளில் இருந்து ஊன்றும் குச்சியை வைத்து தான் நடந்து வருவார். சத்தம் கேட்டு தான் டீ கடையில் இருந்து வெளியே வந்து பார்த்தேனா என்றால்

இல்லை நான் டீ கடைக்கு வெளியே தான் நின்றிருந்தேன். மருத்துவமனையில் விசாரித்த பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. கிழமேல் ரோட்டில் மண் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த சமயத்தில் இருட்டாக இருந்தது என்றால் சரியல்ல கொஞ்சம் வெளிச்சமாக இருந்தது.

(2) எதிரி ஓட்டி வந்ததாக சொல்லும் வாகனத்தின் எந்த பாகம் மோதியது என்றால் வாகனத்தின் முன் பக்கம் மோதியது. எந்த பக்கம் என்றால் வாகனத்தின் நடு பகுதி மோதியது. விபத்து நடந்த இடத்தில் ரத்தக் கறை இருந்ததா என்றால் இருந்தது. சம்பவம் குறிப்பாக மண் ரோட்டில் நடந்ததா, தார் ரோட்டில் நடந்ததா என்றால் தார் ரோட்டில் நடந்தது. தார் ரோட்டில் தென்புறம் நடந்தது. வாகனத்திற்கு ஏதாவது சேதம் ஏற்பட்டதா என்றால் அதை நான் பார்க்கவில்லை. இறந்து போன நபர் முதுமை காரணமாக குச்சி ஊன்றி நடந்து செல்லும் போது அவராக விழுந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும், நான் சொல்வது போல எதிரி வாகனம் பின்னால் வந்து மோதவில்லை என்றும், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் விபத்து ஏற்பட்டதற்கு பின்னிட்டு சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல. எதிரி சரியான திசையில் சென்று கொண்டிருக்கும் போது இறந்து போனவர் தவறி விழுந்து தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே விபத்தை நேரில் பார்த்திருந்தால் வாகனத்தின் சேதம் சொல்லியிருப்பேன் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவர் எனது தாத்தா என்பதால் நஷ்ட ஈடு பெறுவதற்காக கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.24 13:11:09 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 56/2020 |
| Name | : Mani |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**24.07.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் நரசிங்காபுரத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். **18.12.2019** ம் தேதி காலை **05.30** மணி அளவில் சிவகாமி டீ கடையில் நான் டீ சாப்பிட்டுக்கொண்டிருந்த போது கடைக்கு அருகில் உடுமலை – பழநி ரோட்டில் சீரங்கன் என்பவர் டீ சாப்பிட்டுவிட்டு மேற்கே சென்றார். அப்போது கிழக்கிலிருந்து மேற்கே வந்த கார் சீரங்கன் மீது மோதி அவருக்கு தலை மற்றும் காலில் அடிபட்டது. ஆஜர் எதிரி தான் அன்று காரை ஓட்டி வந்தார். உடுமலை அரசு மருத்துவமனைக்கு அவரை அழைத்துச் சென்று மருத்துவமனையில் சேர்த்துவிட்டு நான் வீட்டிற்கு வந்து விட்டேன். காலை சுமார் 09.30 மணி அளவில் அவர் இறந்துவிட்டதாக தகவல் கேட்டு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு போலீசார் விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) சீரங்கன் எனக்கு தாத்தா உறவு முறை. சம்பவம் நடந்த சமயத்தில் அவருக்கு வயது சுமார் 85 இருக்கும். இரு புறமும் தோளில் இருந்து ஊன்றும் குச்சியை வைத்து தான் நடந்து வருவார். சத்தம் கேட்டு தான் டீ கடையில் இருந்து வெளியே வந்து பார்த்தேனா என்றால் இல்லை நான் வெளியே நின்று கொண்டிருந்தேன். போலீசார் என்னை மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அப்போது டீ

கடைக்கு வெளியே நின்றதாக சொன்னேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் இருட்டாக இருந்தது என்றால் சரியல்ல கொஞ்சம் வெளிச்சம் இருந்தது.

(2) வாகனத்தின் எந்த பக்கம் சீரங்கன் மீது மோதியது என்றால் முன் இடது பக்கம் மோதியது. அந்த இடத்தில் ரத்தக் கறை மற்றும் விபத்து நடந்த தடயம் இருந்ததா என்றால் இருந்தது. கிழமேல் ரோட்டில் சம்பவம் தென்புறம் நடந்தது. தென்புறத்தை ஒட்டி சுமார் 10 அடிக்கு மண் ரோடு உள்ளது என்றால் சரிதான். இறந்து போன நபர் முதுமை காரணமாக குச்சி ஊன்றி நடந்து செல்லும் போது அவராக விழுந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றும், நான் சொல்வது போல எதிரி வாகனம் பின்னால் வந்து மோதவில்லை என்றும், நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் விபத்து ஏற்பட்டதற்கு பின்னிட்டு சென்று பார்த்தேன் என்றால் சரியல்ல. எதிரி சரியான திசையில் சென்று கொண்டிருக்கும் போது இறந்து போனவர் தவறி விழுந்து தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. வாகனத்தில் என்ன சேதாரம் ஏற்பட்டிருந்தது என்பதை நான் பார்க்கவில்லை. நான் உண்மையிலேயே விபத்தை நேரில் பார்த்திருந்தால் வாகனத்தின் சேதம் சொல்லியிருப்பேன் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இறந்து போனவர் எனது தாத்தா என்பதால் நஷ்ட ஈடு பெறுவதற்காக கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.. DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.24 13:11:20 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்